Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.84/2017

**Depositions of PW- 4**

| | | | |
|---|---|---|---|
| Name | திருமதி.லட்சுமி | Occupation | இல்லத்தரசி |
| Husband name | முனியாண்டி என்ற ஞானசேகர் | Calling | |
| Village | திருவில்லிபுத்தூர் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th day of July 2026.

09.07.2026

1 முதல் 3 எதிரிகள் ஆஜர் .

**முதல் விசாரணை**

நான் தற்போது கம்பத்தில் குடியிருந்து வருகிறேன். எனது சொந்த ஊர் திருவில்லிபுத்தூர் ஆகும். நான் இல்லத்தரசியாக வீட்டிலிருந்து வருகிறேன். அசா.1 ஐ தெரியும். அவர் எனது கொழுந்தனார். இவ்வழக்கின் எதிரிகளை தெரியும். அவர்கள் நான் வசித்த தெருவில் குடியிருந்து வந்தார்கள். கடந்த 18.04.2016 அன்று மாலை 04.30 மணியளவில் நானும் எனது கொழுந்தனின் மனைவி முத்துலட்சுமியும் எங்கள் மாமியார் வீட்டின் முன்பாக உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தபோது அந்த வழியாக வந்த 1ம் எதிரி எங்களை பார்த்து கேலி செய்து கொண்டே சென்றார். முத்துலட்சுமி 1ம் எதிரியை சத்தம்போட்டார். அப்போது வீட்டிற்குள் இருந்து வெளியே வந்த சந்தானமும் சத்தம்போட்டார். உடனே எதிரி அந்த இடத்திலிருந்து சென்றுவிட்டு மாலை 06.00 மணிக்கு மேல் 1வது எதிரியின் அம்மா விஜயா, மாமா ராமர் ஆகியோர்களை அழைத்துக்கொண்டு வந்தார். 1வது எதிரி சந்தானத்தை பார்த்து தேவிடியா பயலே ஓன் பொண்டாட்டி கைய பிடிச்சு இழுத்தேனா என்று அசிங்கமாக கேட்டார். ராமர் கையிலிருந்த அரிவாளை 1வது எதிரி வாங்கி சந்தானத்தை வெட்டவந்தபோது சந்தானம் நிமிர்ந்துகொண்டதால் வலது நெற்றியில் அடிபட்டு காயம் ஏற்பட்டது.

காயத்திற்கு சிகிச்சை எடுப்பதற்காக திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு ஆட்டோவில் சந்தானத்தை அழைத்து சென்றோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

இவ்வழக்கின் எதிரிகளுக்கும் எங்களுக்கும் நிலம் சம்மந்தமாக உரிமையியல் வழக்கு நிலுவையிலுள்ளது என்றால் சரிதான்.அதனால் நாங்கள் இருதரப்பினரும் பேசிக்கொள்ளமாட்டோம் என்றால் சரிதான். நான் சம்பவ சமயத்திலும் இல்லத்தரசியாக தான் இருந்து வந்தேன். சம்பவத்தன்று நான் வேலைக்கு செல்லவில்லை என்றால் சரிதான். சிறிது நாட்கள் மட்டும் சத்திரபட்டியில் வேலை செய்து வந்தேன். எனது கொழுந்தனான அசா.1 இவ்வழக்கின் எதிரிகளை அடித்ததாக வழக்கு நிலுவையிலுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அசா.1 ஐ மருத்துவமனையிலிருந்து மேல் சிகிச்சைக்கு செல்லுமாறு பரிந்துரைத்தார்கள் என்றாலும் ஆனால் அவர் மேல் சிகிச்சைக்கு செல்லவில்லை என்றாலும் சரிதான். 3ம் எதிரி கையில் வைத்திருந்த அரிவாளை வாங்கி 1ம் எதிரி வெட்ட வந்ததாக எனது முதல் விசாரணையில் கூறிய சங்கதிகளை போலீசார் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றாலும் சரிதான். மேற்படி இவ்வழக்கு சம்பவமானது எனது வீட்டருகில் நடந்ததா அல்லது எதிரிகள் வீட்டருகே நடந்ததா என்றால் இருவர் வீட்டிற்கும் இடைப்பட்ட பகுதியில் நடந்தது.

இவ்வழக்கு சம்பவம் நடந்தபோது அங்கு சுமார் 20 நபர்கள் கூடிவிட்டார்கள் என்றால் சரிதான். போலீசார்இவ்வழக்கு சம்பவம் பற்றி என்னிடமோ மற்ற நபர்களிடமோ விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். மேற்படி நான் கூறியவாறு இவ்வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் ஏற்கனவே அசா.1ன் மீது இவ்வழக்கின் எதிரிகள புகார் கொடுத்துள்ளதால் அசா.1 கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் தற்போது பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி நான் கூறிய தகாத வார்த்தைகளை இவ்வழக்கு சம்பவத்தின்போது 1ம் எதிரி பயன்படுத்தவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.